# குறிஞ்சி நிலப் பண்பாட்டில் குறவர் இனக்குழுக்கள்

***கணேசன் .நா***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

***நெறியாளர் முனைவர் க. பாலாஜி***
பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383391

## முன்னுரை

*தமிழ்க்குடிகளின் வாழ்வியலைப் பிரதிபலிப்பதில் சங்க இலக்கியப் பனுவல்கள் பெரும்பங் காற்றுகின்றன. திணைசார் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட சங்கப் பனுவல்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஒவ்வொரு நிலத்தின் கூறுகளும், அவற்றின் கருப் பொருள்களும், நில மாந்தர்களின் பழக்க வழக்கங்களும் பதிவு செய்யப்பட்டிருப்பதால் தமிழ்க்குடிகளின் வரலாற்றையும் வாழ்வியலையும் ஆராய்வதில் இவை முக்கியமானவைகளாக உள்ளன. அங்ஙனமே குறிஞ்சி நில மாந்தர்களாக வாழ்ந்த குறவர்கள் பண்பாடு பற்றிய தகவல்களைச் சங்கப் பனுவல்களின் வழி ஆராய்ந்து காண்பது இவ்வியலின் நோக்கமாகும்.*

## குறிஞ்சி நிலக் கூறுகள்

*குன்றுகளில் வாழ்ந்தமையால் குன்றவர் என்ற சொல்லிலிருந்து குறவர் என்ற பெயர் வந்துள்ளது. மலையும் மலைசார்ந்த பகுதிகளும் குறவர்களின் வாழ்விடம். தமிழில் மலையைக் குறிக்கும் பல சொற்களைக் காண முடியும். குன்று, வரை, குன்றம், குறும்பு (குறுமலை), பருவதம், வெற்பு, விலங்கல், பொருப்பு, பொறை ஆகியவை மலையைக் குறிப்பதாகும். இவையன்றி அகமம், அத்தி, அரி, இரவி, இலும்பு, இறும்பூது, ஓதி, கந்தரம், கல்லகம், கவடு, காண்டம், கிரி, குதரம், குத்திரம், குறிஞ்சி, கோ, கோட்டை, கோத்திரை, சக்கரம், சிகி, சிலை, சேலம், தடம், தணி, தரணி, தாரணி, தரம், தராதரம், தானி, துங்கம், துடரி, திகிரி, நகம், நவிரம், நாகம், பதலை, பளகம், பாதவம், பீலி, புறவிடன், பொகுட்டு, பொங்கர், போதி, மன், மாதிரம், மேகலை, மேதரம், வல்லரண், வாரி, விடம், விடரகம், விடரி, வீரம்/வேரம்* (October 7,2021, https://yarl.com/forum3/topic/261416&©ø») *என்ற சொல்லுக்கு சரியான ஒத்தசொற்கள்) போன்ற சொற்கள் அனைத்தும் மலை சார்ந்த பகுதிகளைக் குறிக்கும் சொற்களாக அமைகின்றன. மலைசார்ந்த புவியியல் அமைப்பு வெவ்வேறு தன்மையைக் கொண்டதாகக் காணப்படுவதால் பழந்தமிழர்கள் அந்நிலத் தன்மைக்கேற்ப பெயர்களை வழங்கியுள்ளனர்.*

*தமிழ் இலக்கிய மரபில், மலை என்னும் சொல், ஓங்கி உயர்ந்த பருவதத்தைக் குறிக்கும். மலையிற் குறைந்தது குன்று என்றும், குன்றிலும் குறைந்தது பாறை என்றும், அறை என்றும், கல் என்றும் பெயர் பெறும்.*

***(ரா.பி.சேதுபிள்ளை, தமிழகம் ஊரும் பேரும், பக்.3,4)***

*என்று ரா.பி.சேதுபிள்ளை மலை சார்ந்த பகுதிகளைக் குறிப்பிட்டுள்ளார். மலைப்பகுதி குறித்த ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு வேறுபாட்டை உணர்த்துவனவாக அமைகின்றன.*

*அடிவாரம், தாள், வெற்பு - மலையின் அடிப்பகுதி*

*அடுக்கம் - பன்மலை வரிசை*

*ஆரிப்படுகர் - அரிதின் முயன்று ஏறியும்*

*இறங்கியும் செல்லும் கடிய மலை வழி*

*கோடு - இரு குவடுகள் சேரிமிடம்*

*குறும்பொறை - பொறையை விடச் சிறயது, பரந்துபட்ட கற்பாறை எனவும் கொள்ளலாம்*

*சிலம்பு, அரைமலை - ஒரு உயரமான மலைச்சரிவில், இடையே அமைந்த ஒரு சிறிய சமவெளிப்பகுதி*

*சிறுமலை, குன்று, அரி, குன்றம், மிசை, ஏந்தல் - டடிடூடு*

"*மல்*" *என்றால் வலிமை எனப்பொருள். வலிமையான கருங்கற்களால் ஆன நிலப்பகுதி மலை எனப்பட்டது.*

*மலையையும் மலை சார்ந்த இடத்தையும் குறிக்குங் திணை-குறிஞ்சித் திணை* (October 7, 2021, https://yarl.com/forum3 topic/ 261416 &©ø» *என்ற சொல்லுக்கு சரியான ஒத்த சொற்கள்) இங்ஙனம் மலையைக் குறிக்கும் சொற்கள் அனைத்தும் மலைகள் அமைந்த தன்மைக்கேற்ப பெயர்பெற்றிருப்பதையும் காணமுடிகிறது.*

## குறிஞ்சி நில மாந்தர்களின் நிலவியல் பண்பாடு

*ஒவ்வொரு நிலத்தன்மைக்கும் ஏற்ப பெயர் வைக்கும் மொழிநுட்பத்தைப் பழந்தமிழ் தொட்டே பார்க்கமுடிகிறது. நிலத்தின் பெயராலேயே நில மக்களின் பெயரும் வழங்கப்பட்டுள்ளன. குன்று என்ற பெயரிலிருந்து குன்றவன் என்பது போல வெற்பு என்பதிலிருந்து வெற்பன், மலை என்பதிலிருந்து மலையன் என்ற பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. குறிஞ்சி நிலம், இயற்கையாக அமைந்த தன்மையினால் பெற்ற பெயர்கள் போலவே அந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் சீரமைப்பினால் பல்வேறு பெயர்களையும் பெற்று விளங்கியுள்ளது.*

***வன்புலம், புன்புலம், மேட்டுநிலம், வலியநிலம், கானம், புனம், புலம், ஏனல், துடவை, முரம்பு***

***(பக்தவத்சல பாரதி, சங்ககாலத் தமிழர் உணவு, பக்.33, 34)***

*தாங்கள் வாழும் தன்மைக்கேற்ப நிலத்தைப் பக்குவப்படுத்தியதால் புனம், ஏனல் போன்ற பெயர்களாலும் குறிஞ்சி நிலம் வழங்கப் பட்டிருப்பதை அறிய முடிகிறது.*

*ஆதி சமுகத்தின் வாழ்விடம் மலையும் காடுமாகும். வேட்டையாடி உணவு சேகரித்தவனுக்கு இவையே உகந்த இடங்களாகும். வாழ்க்கைத் தொழிலுக்கு ஏற்ப இருப்பிடத்தையும் குடியிருப்பையும் மக்கள் அமைத்துக் கொள்வார்கள். சுற்றுச் சூழல் வாழ்வியல் கூறுகளைத் தீர்மானிக்கிறது என்னும் வாதத்திற்கிணங்க சங்ககால வேடர்கள் தங்கள் தொழிலுக்கு ஏற்ப பல்வேறு இடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டதைச் சங்க இலக்கியங்கள் வெகுவாகவே பதிவு செய்துள்ளன.*

***உலைக்கல் அன்ன பாறை***

***(குறுந்.12:2)***

***(உலைக்கல் போன்ற சூடான கற்பாறைகள்)***

***"கல் உயர் நனந்தலை"***

***(குறுந்.297.5)***

***(மலைகள் உயர்நத அகன்ற இடம்)***

***குன்றத்து உச்சிக் கலான்***

***(நற்.92.4)***

***(மலை உச்சியின் அருகில்)***

***வன்புலக் காடு***

***(நற்.59.6)***

***(அடர்ந்த வன்புலக் காடு)***

***இன்னாக் கானம்***

***(குறுந்.274.6)***

***(துன்பங்கள் நிறைந்த காடு)***

***மரம் புல்லென்ற முரம்பு உயர் நனந்தலை***

***(அகம் 67.4)***

***(மழையின்மையால் மரங்கள் பொலிவிழந்தும் கற்குவியல்கள் காய்ந்தும் வறண்டு கிடக்கும் இடம்)***

***வெஞ்சுரம்***

***(அகம்.131.7)***

***(வெப்பமுடைய பாலை நிலம்)***

***வேடர்களின் வாழ்விடங்கள் மலையும் காடும் சார்ந்த பகுதிகளாக இருந்துள்ளன. மலையும் மலைசார்ந்த குறிஞ்சித் திணையில் வேட்டையாடி உணவு சேகரித்தல் இயல்பான உணவாதாரமாக அமைந்தது.***

***(பக்தவத்சல பாரதி, இலக்கிய மானுடவியல், ப.59)***

*சங்கப்பனுவல்களில் பதிவாகியுள்ள குறிஞ்சி மாந்தர்களின் வாழிடங்கள் நில அடிப்படையில் அமைந்த வேறுபாடுகளைப் பக்தவத்சல பாரதி எடுத்தியம்பியுள்ள கூற்றைக்கொண்டு அறியலாம். இயற்கையாக அமைந்த நிலத்தைப் பண்படுத்தி*

*குறிஞ்சி நில மாந்தர்கள் உணவு உற்பத்திக்கு ஏற்ற நிலங்களாக வளப்படுத்தியுள்ளமை இதன்கண் அறிந்து கொள்ளமுடியும்.*

**குறவர்கள் வசிப்பிடம்**

*மலைகளில் குறவர்கள் புற்களால் வேயப்பெற்ற குடில்களை அமைத்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பதற்கு ஐங்குறுநூறு பாடலடி சான்றாக அமைந்துள்ளது.*

***குன்றக் குறவன் புல்வேய் குரம்பை***

***(ஐங்.252,1)***

*மேற்கண்ட மலைத்தொடர்களில் ஒவ்வொரு மலை அமைப்பிற்கேற்ப குறவர்கள் தங்கள் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்துள்ளனர். அதன் பெயராலேயே குன்றக் குறவர், மலை உறை குறவர், கல் கெழு குறவர், கானக் குறவர் என்ற பெயர்களால் குறவர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.*

**தற்காலக் குறவர்களின் வாழ்வியல் சிக்கல்கள்**

*சங்கப் பனுவல்கள் எடுத்தியம்பும் குறிஞ்சி நிலமும் நிலம் சார் பண்பாட்டிலும் குறவர்கள் முதன்மை மாந்தர்களாக உள்ளனர். மலை நிலங்களைச் சீர்படுத்தினர். உணவு உற்பத்தியின் ஆதாரத்தன்மையுடைய மூலப்பொருளாக நிலத்தைப் பண்படுத்தி வாழ்ந்தனர். குறவர்ளைப் பல பெயர்களில் இன்றும் சாதியப் படி நிலைகளாகப் பிரித்து வைத்துள்ளனர். இவர்களின் பூர்விகம் மலைகள் சூழ்ந்த குறிஞ்சி நிலம். பல்வேறு காரணங்களினால் சமவெளிப் பகுதிகளில் சொந்த நிலமின்றி பல குறவர் இனக்குழுக்கள் அலைகுடிகளாக இன்று வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான உரிய அடையாளங்களைப் பெறுவதில் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.*

*குறவர் பழங்குடி சான்றிதழ் கேட்டால், "எந்த மலையில் நீங்கள் வாழ்கிறீர்கள்?" என்று கேட்டும், சில பகுதிகளில் குறவன் தாழ்த்தப்பட்டோர் சான்றிதழ்கூட கிடைக்காமல், அலைக்கழிப்புக்குள்ளாகி வருகின்றனர். குறவர் சமூகம் 26 பிரிவினராகப் பகுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளனர். "மலைக்குறவன்" என்றால் பழங்குடியினர் (குகூ) என்றும் "குறவன்" என்றால் தாழ்த்தப்பட்டோர் (குஇ) என்றும் "குறவர்" என்றால் கண்காணிக்கப்பட்ட சீர்மரபினர் என்றும் தமிழகத்தின் அனைத்து பட்டியல்களிலும் வைக்கப்பட்டுள்ளதுதான் குறவன் உள்ளிட்ட பிரிவினர் சந்திக்கும் மிகப்பெரிய சிக்கலாக உள்ளது. (மணி கோ.பன்னீர்செல்வம், தொன்முதுகுறவர், ப.20) என்ற மணி கோ.பன்னீர்செல்வம் எடுத்துக் காட்டும் இன்றைய குறவர்களின் வாழ்வியல் சிக்கல்களை அதிகம் உற்று நோக்க வேண்டியதாக உள்ளது. மனிதன் தோற்றம் பெற்று இனக் குழுக்களாக வாழ்ந்த காலத்தில் முந்து நிலமான குறிஞ்சி நிலக்குடிகளின் எச்சங்கள் இன்று நிலமற்றவர்களாகத் தங்களுக்கான உரிய அடையாளங்களைப் பெறுவதற்குத் தொடர்ந்து போராடுபவர்களாக இருக்கின்றனர். இஃது ஒரு நாகரிகப் பழம் சமூகத்தைக் கொண்டாடும் அனைவருக்கும் இழுக்கைத் தருவதாகத்தான் அமையும்.*

**முடிவுரை**

*நில அமைப்புகளில் முதன்மைத்துவம் பெறுவது குறிஞ்சி. பல்வகை மலை அமைப்புகளைக் கொண்ட நிலவியல் தன்மைக்கேற்ப பெயர் பெற்றிருந்தன குறிஞ்சியின் குன்றுகள். இந்நிலங்களில் வாழ்ந்த மக்கள் குன்றவர்களாகிய குறவர்கள். மலை நிலத்தை மனித வாழ்வியலுக்கு ஏற்ற நிலமாகப் பண்படுத்தியவர்கள். தினை விளைவித்து வேளாண் சாகுபடி செய்தவர்கள். சங்ககாலப் பனுவல்களின் குறிஞ்சி நில மாந்தர்களுள் நீங்கா இடம் பெற்றவர்கள். தற்கால குறவர்களின் வாழ்க்கை நிலையை நோக்கும் போது, ஒரு பண்பட்ட நாகரிக வாழ்ந்த இத்தமிழ்ச சமூகத்திடம் பழங்குடிகளின் அவலத்தைச் சுட்டவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதும் துயர் மிகுந்த ஒன்றாகக் கருத வேண்டியுள்ளது. தொல்குடிகளின் வாழ்வியலைப் பேணுவதும் மேம்படுத்துவதும் தொன்மையைப் பேணுவதாகத்தான் அமையும்.*

நவீன வாழ்வியலுக்குள் வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் பழங்குடிகளின் வாழ்க்கை சிதைவுறாது மேம்படுத்த வேண்டியது அனைவரின் தலையாய பொறுப்பாகும்.

## துணை நூற்பட்டியல்


1. ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை 600098. 2007.
2. சேதுபிள்ளை ரா.பி. தமிழகம் ஊரும் பேரும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 14, 2005.
3. பக்தவத்சல பாரதி, இலக்கிய மானுடவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம் - 621310.
4. பக்தவத்சல பாரதி, சங்ககாலத் தமிழர் உணவு, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், 669, கே.பி.சாலை, நாகர்கோவில் 629001, 2021.
5. பன்னீர்செல்வம் மணி கோ. தொன்முது குறவர்: அலையுறும் வாழ்வு, தடாகம் பதிப்பு, 112, திருவள்ளுவர் சாலை, திருவான்மையூர், சென்னை 600041, 2019.